## இராணிப்பேட்டை நகராட்சி

இராணிப்பேட்டை நகரமன்றத்தின் சாதாரணக் கூட்டம் 31.05.2021–ம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு ஏ.பி. முகம்மது சுலைமான் புதிய நகரமன்ற கூடத்தில் தனி அலுவலராகிய என்னால் தலைமைத் தாங்கி நடைபெறும் கூட்டத்தில் கீழ்காணும் பொருட்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளன.

**தலைமை :– தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்**

| மன்றக் கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்றக் கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 31.05.2021 | **பொருள் எண்.519**<br>இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் பிப்ரவரி 2021 , மார்ச் 2021, ஏப்ரல் 2021 மாதங்களின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம்<br>(ந.க.எண்.1308/2015/சி1) | நகர்மன்றத் தீர்மான எண். 519<br>மன்றப்பொருள் அனுமதிக்கப்படுகிறது |
| 31.05.2021 | **பொருள் எண்.520**<br>இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி 2021 , மார்ச் 2021, ஏப்ரல் 2021 மாதங்களின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம்<br>(ந.க.எண்.675/2015/சி1) | நகர்மன்றத் தீர்மான எண்.520<br>மன்றப்பொருள் அனுமதிக்கப்படுகிறது |
| | | |
| 31.05.2021 | **பொருள் எண்.521**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.28, கே.எச்.ஷூஸ் பின்புறம் உள்ள பிஞ்சி சுடுகாட்டு பகுதியில் கட்டப்பட்டுள்ள நவீன எரிவாயு தகன மேடை கட்டிமுடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரவும், அதனைப் பொறுப்பேற்று நடத்தவும், பராமரிக்கவும், விருப்பம் தெரிவித்துள்ள பாலாறு ரோட்டரி சங்கம், இராணிப்பேட்டை அவர்களுக்கு இவ்வலுவலக செயல்முறை உத்தரவு ந.க.எண்.1415/2019/எச்1 நாள் | நகர்மன்றத் தீர்மான எண். 521<br>மன்றப்பொருள் அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| | 20.01.2021–ல் அரசாணையில் தெரிவித்துள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு 25.01.2021 முதல் மூன்றாண்டுகளுக்கு பாலாறு ரோட்டரி சங்கம், இராணிப்பேட்டை அவர்களுக்கு நவீன எரிவாயு தகன மேடை கூடத்தை ஒப்படைப்பு செய்யப்பட்டது. இந்நிலையில் பாலாறு ரோட்டரி சங்கம், இராணிப்பேட்டை அவர்கள் நவீன எரிவாயு தகன மேடை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவில்லை. எனவே, நவீன எரிவாயு தகன மேடையினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருமாறு பலமுறை இது குறித்து மேற்படி நிறுவனத்திடம் அறிவுறுத்தப்பட்டது. ஆனால், பாலாறு ரோட்டரி சங்கம், நவீன எரிவாயு தகன மேடை கூடத்தினை நடத்த விருப்பமில்லை என துப்புரவு அலுவலர் தெரிவித்துள்ள விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>1) மன்றம் பதிவு செய்யலாம்.<br>2) பாலாறு ரோட்டரி சங்கம், இராணிப்பேட்டை அவர்களுக்கு வழங்கிய செயல்முறை உத்தரவினை இரத்து செய்ய மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>(ந.க.எண்.1415/2019/எச்1 ) | |
| 31.05.2021 | **<u>பொருள் எண்.522</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 28, கே.எச். ஷூஸ் பின்புறம் உள்ள பிஞ்சி சுடுகாடு பகுதியில் கட்டப்பட்டுள்ள நவீன எரிவாயு தகன மேடை கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளது. மேற்படி நவீன எரிவாயு தகன மேடையினை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பொறுப்பேற்று நடத்தவும், பராமரிக்கவும், விருப்பம் தெரிவித்துள்ள "Srikalai Enviornment Education & Health Trust" Chennai என்ற தனியார் தொண்டு நிறுவனம் சமர்ப்பித்த கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது .<br>**<u>அலுவலக குறிப்பு :–</u>**<br>1) மன்றம் பதிவு செய்யலாம்.<br>2) அவசர அவசியம் கருதி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர கட்டி முடிக்கப்பட்ட தகன எரிவாயு கூடத்தை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3) துறை, அரசாணை (aiy) v©. 228 ehs¦ 13.11.2008–ல் தனியார் நிறுவனத்திற்கு வழங்க அதிகாரம் அளித்ததின் பேரில¦ "Srikalai Enviornment Education & Health Trust" Chennai அவர்களுக்கு குறுகிய கால மேலாண்மை நோக்கில், 1 வருடத்திற்கு பராமரிப்பு மேற்கொள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு மன்றம் அனுமதி வழங்கலாம்<br>(ந.க.எண்.1415/2019/v¢1 ) | நகர்மன்றத் தீர்மான எண். 522<br>மன்றப்பொருள் அனுமதிக்கப்படுகிறது |
| | **<u>பொருள் எண்.523</u>** | |

<table>
<tr>
<td>31.05.2021</td>
<td>
இராணிப்பேட்டை நகராட்சி, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.7366/2016/யுபிஏ2 நாள் 19.03.2021 –ன்படி, சாலையோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டை மற்றும் சாலையோர விற்பனை சான்றிதழ் வழங்கிட அறிவுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து, இராணிப்பேட்டை நகராட்சியில் 210 சாலையோர வியாபாரிகளில் 75 நபர்களுக்கு மட்டும் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள பயனாளிகளுக்கு அடையாள அட்டை மற்றம் விற்பனை சான்றிதழ் வழங்க வேண்டியுள்ளது. மேற்படி உத்தேச பணிக்காக ரூ.50,000/– மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகின்றது. மேலும், இப்பணி விரைவில் முடிக்கப்பட வேண்டி உள்ளதால், விலைப்புள்ளிகள் பெற்று நடவடிடக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதால், கீழ்க்கண்டவாறு பெறப்பட்ட விலைப்புள்ளிகள் விவரம் .
<table>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">சுாலையோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டை தயாரித்து வழங்கும் பணி</td><td>M/s.Sindu Agencies</td><td>M/s.Gokul Online Service</td><td>M/s.Krishna Net Centre</td></tr>
<tr><td>ரூ.250/–</td><td>ரூ.265/–</td><td>ரூ.280/–</td></tr>
<tr><td>2</td><td>விற்பனை சான்றிதழ்கள் வழங்கும் பணி</td><td>ரூ. 50/–</td><td>ரூ.75/–</td><td>ரூ.95/–</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளித் தந்துள்ள M/s.Sindu Agents அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை மேற்கொள்ள மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br>
<u>அலுவலக குறிப்பு :-</u><br>
1) ஒப்புதல் வழங்கலாம்.<br>
2) குறைந்த விலைப்புள்ளி தந்துள்ள M/s.Sindu Agencies அவர்களின் விலைப்புள்ளிகளை ஏற்று பணி உத்தரவு வழங்கவும் ஒப்புதல் வழங்கலாம்.<br>
(ந.க.எண்.685/2021/எப்1)<br>
எண் 1–ல் கண்டுள்ள திரு. கே.அசோக், ஒப்பந்ததாரர் என்பவர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.10 % குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>
1) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழஙக தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண். 0021 /2020/இ1)
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 523<br>மன்றப்பொருள் அனுமதிக்கப்படுகிறது</td>
</tr>
<tr>
<td>31.05.2021</td>
<td><u>பொருள் எண்.524</u><br>
இந்நகராட்சி பழைய அலுவலக வளாக கட்டித்தில் இயங்கிவரும் காவல் கண்காணிப்பாளர் அலுவலக முதல் தளத்தில் பொதுநிதியின் கீழ் ரூ.9,00,000/– மதிப்பீட்டில் Aluminium partion False Ceiling Waiting Room Arrangements செய்யும் பணி பகுதி –II-க்கு நகரமன்ற</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 524<br>மன்றப்பொருள்</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>தீர்மானம் எண். 497 நாள் 26.02.2021—ல் அனுமதியளிக்கப்பட்டுள்ளதின் பேரில் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 21.05.2021 அன்று கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர்</th><th>சதவீகிதம்</th></tr>
<tr><td>1</td><td>கே,அசோக் .சாமி நகர், பாகாயம்,<br>வேலூார்</td><td>மதிப்பீட்டைவிட<br>0.07% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>டி.அருணகிரி<br>23/87, பஜார் தெரு, இராணிப்பேட்டை</td><td>மதிப்பீட்டைவிட<br>0.32% அதிகம்</td></tr>
</table><br>
<u>அலுவலக குறிப்பு :-</u><br>
1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>
2) மேற்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1—ல் கண்டுள்ள திரு. கே.அசோக், ஒப்பந்ததாரர் என்பவர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.07% குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>
3) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழஙக தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண். /2021/இ1)</td><td>அனுமதிக்கப்படுகிறது</td></tr>
<tr><td>31.05.2021</td><td><u>பொருள் எண்.525</u><br>
இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயஙகும் TATA ACE வாகனம் எண்.TN73Q6697 இரண்டு டயர்கள் மற்றும் இரண்டு டியூப் வாங்க விலைப்புள்ளிக் கோருவதற்கும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.5000/—க்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு :-</u><br>
மன்றம் அனுமதிஅளிக்கலாம்.<br>
(ந.க.எண்.2587/2020/எச்1)</td><td>நகர்மன்றத் தீர்மான எண். 525<br>மன்றப்பொருள்<br>அனுமதிக்கப்படுகிறது</td></tr>
<tr><td>31.05.2021</td><td><u>பொருள் எண்.526</u><br>
இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயஙகும் TATA ACE வாகனம் எண்.TN73AB9365 பழுது அடைந்துவிட்டதால், மேற்படி வாகனத்தை பழுது நீக்கம் செய்வதற்கு விலைப்புள்ளிக் கோரவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.20000/—க்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு :—</u></td><td>நகர்மன்றத் தீர்மான எண். 526<br>மன்றப்பொருள்<br>அனுமதிக்கப்படுகிறது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>மன்றம்அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.778/2021/எச்1)</td><td></td></tr>
<tr><td></td><td>

<u>பொருள் எண்.527</u>

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவின் கீழ் பொதுமக்களுக்கு கொரோனா பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த உள்ளூர் பத்திரிக்கைகளில் விளம்பரம் செய்தமைக்கு கீழ்க்கண்டுள்ளவாறு தினசரி நாளிதழ் பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே , பட்டியல் தொகை (ரூபாய் 1,71,317/–) –யை வழங்க மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ.எண்</th><th>தினசரி நாளிதழ் பெயர்</th><th>நாள்</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>மாலை முரசு</td><td>08.04.2020</td><td>ரூ.12600/–</td></tr>
<tr><td>2</td><td>The South India</td><td>20.04.2020</td><td>ரூ.20,000/–</td></tr>
<tr><td>3</td><td>தினகரன்</td><td>08.04.2020</td><td>ரூ.24,400/–</td></tr>
<tr><td>4</td><td>மாலை மலர்</td><td>08.04.2020</td><td>ரூ.9975/–</td></tr>
<tr><td>5</td><td>Express Publications Madurai Pvt Limited</td><td>07.04.2020</td><td>ரூ.25200/–</td></tr>
<tr><td>6</td><td>தினமலர்</td><td>08.04.2020</td><td>ரூ.20349/–</td></tr>
<tr><td>7</td><td>தேசிய சுடர்</td><td>16.04.2020</td><td>ரூ.18500/–</td></tr>
<tr><td>8</td><td>தினத்தந்தி</td><td>07.04.2020</td><td>ரூ.16107/–</td></tr>
<tr><td>9</td><td>இந்து தமிழ் இசை</td><td>09.04.2020</td><td>ரூ.13440/–</td></tr>
<tr><td>10</td><td>தமிழ் முரசு</td><td>10.04.2020</td><td>ரூ.10800/–</td></tr>
<tr><td colspan="3" align="right">மொத்தம்</td><td>ரூ.1,71,371/–</td></tr>
</table>

<u>அலுவலக குறிப்பு :–</u>

1) மன்றம் ஒப்புதல் வழங்கல்ாம்
2) ரூ. 1,71,371/–யை பொதுநிதியில் செலவினம் மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**(ந.க.எண்.1203/2020/எச்1)**

</td><td>நகர்மன்றத் தீர்மான எண். 527<br>மன்றப்பொருள் அனுமதிக்கப்படுகிறது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 31.05.2021 | **பொருள் எண்.528**<br>இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள 125 கே.வி.எ ஜெனரேட்டர் பழுதடைந்துள்ளதால் எதிர்பாராமல் ஏற்படும் மின்தடையினால் அலுவலக பணிகள் பாதிக்காமல் இருக்க உடன் ஜெனரேட்டரை சரிசெய்யவும் அதற்காகும் தோராய செலவினம் தொகை ரூ.3696/—ற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று உள்ளுர் விலைப்புள்ளி கோரி பழுதுகள் நீக்கம் செய்திடும் பணி செய்தமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்படி பணிக்கான தோராய செலவினம் ரூ.3696/— இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>4. மேற்படி பணிக்கான தொகை திரு.டி.பாலசந்தர் மின்கம்பி பணியாளர் என்பவரால் தொகை ரொக்கமாக செலுத்தப்பட்டுள்ளதால் அன்னாருக்கு அத்தொகையினை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>**(ந.க.எண். /2021/இ1)** | நகர்மன்றத் தீர்மான எண். 528 மன்றப்பொருள் அனுமதிக்கப்படுகிறது |
| 31.05.2021 | **பொருள் எண்.529**<br>இந்நகராட்சி வார்டு எண்.23 சந்தைமேடு பகுதியில் அமைந்துள்ள 14.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து மாந்தாங்கல் மோட்டூர் தண்ணீர் தொட்டிக்கு நீர்ஏற்றும் அறையில் அமைந்துள்ள மெயின் சுவிட்ச் மற்றும் மின்சார உதிரி பாகஙகள் பழுதடைந்துள்ள காரணத்தினால் அவற்றை புதியதாக வாங்கி பொருத்தவும் அதற்காகும் தோராய செலவினம் தொகை ரூ. 25000./—ற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்கள் அனுமதிபெற்று உள்ளுர் விலைப்புள்ளி கோரியதற்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதியளிக்கலாம்.<br>3. மேற்படி பணிக்கான செலவினம் ரூ.25000/— இந்நகராட்சி குடிநீர்நிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண். 797 /2021/இ1)** | நகர்மன்றத் தீர்மான எண். 529 மன்றப்பொருள் அனுமதிக்கப்படுகிறது |
| 31.05.2021 | **பொருள் எண்.530**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.20 காட்டன் பஜார் சாலை முதல் ஏஜெண்ட் பெருமாள் கோயில் தெரு வரை உள்ள பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு ஏற்கனவே பழுதடைந்துள்ள குடிநீர் பகிர்மான குழாயினை அகற்றி புதியதாக பதிக்கவும் அதற்காகும் தோராய செலவினம் தொகை ரூ. 2,50,000/—ற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | நகர்மன்றத் தீர்மான |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலககுறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்படி பணிக்கான செலவினம் ரூ. 250000/– இந்நகராட்சி குடிநீர்நிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**(ந.க.எண். /2021/இ1)** | எண். 530<br>மன்றப்பொருள்<br>அனுமதிக்கப்படுகிறது |
| 31.05.2021 | **<u>பொருள் எண்.531</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 2 காரை கூட்ரோடு பகுதியில் தேசிய நெடுஞ்சாலை துறையினரால் சாலை பணிகள் மேற்கொண்ட போது IVPM பகுதியில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து காரை பகுதிக்கு செல்லும் பிரதான குடிநீர் விநியோக குழாய் உடைப்பு ஏற்பட்டு பழுதடைந்ததால் குடிநீர் விணாகியதாலும் காரை பகுதிக்கு குடிநீர் விநியோகம் முற்றிலும் தடைப்பட்டதன் காரணமாகவும் போர்கால அடிப்படையில் மேற்படி பிரதான குடிநீர் விநியோக குழாயில் ஏற்பட்ட பழுதினை உள்ளூர் விலைப்புள்ளி கோரி உடன் சரி செய்யவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.30000/– ற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலககுறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரியதற்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்படி பணிக்கான செலவினம் ரூ.30000/– இந்நகராட்சி குடிநீர்நிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண். 970 /2021/இ1)** | நகர்மன்றத் தீர்மான<br>எண். 531<br>மன்றப்பொருள்<br>அனுமதிக்கப்படுகிறது |
| 31.05.2021 | **<u>பொருள் எண்.532</u>**<br>இந்நகராட்சி வார்டு எண்,2 காரை கூட்ரோடு பகுதியில் தேசிய நெடுஞ்சாலைதுறையினரால் சாலை பணியினை மேற்கொள்ளும் போது பிரதான குடிநீர் விநியோக குழாயில் ஏற்பட்ட உடைப்பினை சரிசெய்திடும் அத்தியவசிய பணிக்கு இந்நகராட்சி தனி அலுவலர் அவர்கள் 20.05.2021–ஆம் தேதியில் முன்அனுமதி அளித்துள்ளதின் பேரில் உள்ளூர் விலைப்புள்ளி கோரியதற்கு 20.05.2021–ஆம் தேதியில் கீழ் காணும் பட்டியலில் கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள மூன்று உள்ளூர் விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. | நகர்மன்றத் தீர்மான<br>எண். 532<br>மன்றப்பொருள்<br>அனுமதிக்கப்படுகிறது |

| வ.எண் | ஒப்பந்ததாரர் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | கே.இராமமூர்த்தி | |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>290/2, விநாயகர் கோயில் தெரு,<br>வள்ளலார் நகர்,<br>இராணிப்பேட்டை</td><td>27997/–</td></tr>
<tr><td>2</td><td>பி.ஜி.பாபு,<br>28/43, ஆசிரியர் காலனி<br>காட்பாடி ரோடு<br>குடியாத்தம்</td><td>29100/–</td></tr>
<tr><td>3</td><td>ஜி.சந்திரன்,<br>வேலூார்</td><td>29970/–</td></tr>
</table>
<u>அலுவலககுறிப்பு</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று உளளூர் விலைப்புள்ளி கோாரியதற்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
3. மேற்காணும் பட்டியலில் வரிசை எண் 1–ல் கண்டுள்ள திரு.கே,இராமமூர்த்தி என்பவர் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>
<br>
(ந.க.எண். 970 /2021/இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>31.05.2021</td>
<td>
<u>பொருள் எண்.533</u><br>
இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அவர்களின் நேர்முக அறிவுரைக்கிணஙக இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட R S ரோடு மற்றும் கெல்லீஸ் ரோடு பகுதியில் உள்ள மின்கம்பஙகள் பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதால் அவற்றை அகற்றி சாலையின் ஒரத்தில் மீண்டும் பதிக்கவும் திட்ட மதிப்பீடு அறிக்கை அனுப்பி வைக்குமாறு இளநிலை பொறியாளர், நகரம் –I தமிழ்நாடு மின்சார வாரியம், இராணிப்பேட்டை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டமைக்கு மேற்குறிப்பிட்ட பணியின் ஒரு பகுதிக்கான தொகை ரூ.288740/– செலுத்துமாறு திட்ட மதிப்பீடு அறிக்கை வரப்பெற்றதனை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலககுறிப்பு</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் முன்அனுமதிபெற்று தொகை செலுத்தியமைக்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>நகர்மன்றத் தீர்மான<br>எண். 533<br>மன்றப்பொருள்<br>அனுமதிக்கப்படுகின்றது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | 3. மேற்படி பணிக்கான செலவினம் தொகை ரூ.288740/– இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.2336 /2020/இ1)** | |
| 31.05.2021 | **<u>பொருள் எண்.534</u>**<br>இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்த வார்டு எண்.1 முதல் 30 வரையுள்ள பொது மக்களுக்கு சப்ளை செய்யப்படும் குடிநீர் குளோரினேஷன் செய்வதற்கும் 2021–2022–ம் ஆண்டிற்கு தேவையான சோடியம் ஹைப்போ குளோரைடு லிக்யூட் வாங்கி இருப்பில் வைத்து உபயோகிக்கவும் அதற்க்கான தோராய செலவினம் ரூ.9,90,000/–ற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினம் ரூ.9,90,000/– இந்நகராட்சி குடிநீர்நிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். /2021/இ1) | நகர்மன்றத் தீர்மான எண். 534<br>மன்றப்பொருள் அனுமதிக்கப்படுகிறது |
| 31.05.2021 | **<u>பொருள் எண்.535</u>**<br>இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அவர்களின் நேர்முக அறிவுரைக்கிணஙக இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட R S ரோடு மற்றும் கெல்லீஸ் ரோடு பகுதியில் உள்ள மின்கம்பஙகள் பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதால் அவற்றை அகற்றி சாலையின் ஓரத்தில் மீண்டும் பதிக்கவும் திட்ட மதிப்பீட்டு அறிக்கை அனுப்பி வைக்குமாறும், இளநிலைப் பொறியாளர், நகரம் –I தமிழ்நாடு மின்சார வாரியம், இராணிப்பேட்டை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டமைக்கு மேற்குறிப்பிட்ட பணியின் ஒரு பகுதிக்கான தொகையாக ரூ.2,88,740/– செலுத்துமாறு திட்ட மதிப்பீட்டு அறிக்கை வரப்பெற்றதைத் தொடர்ந்து, மேற்படி தொகை 29.09.2020–ம் தேதியில் செலுத்தப்பட்டது தற்போது மீண்டும் மேற்படி பணியின் 2–வது பகுதிக்கான திட்ட மதிப்பீட்டு தொகையாக ரூ.5,52,270/– செலுத்துமாறு கோரி வரப்பெற்ற இளநிலைபொறியாளர் நகரம் –1 தமிழ்நாடு மின்சார வாரியம் அவர்களின் கேட்பு கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலககுறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினம் தொகை ரூ.5,52,270/– இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.2336 /2020/இ1)** | நகர்மன்றத் தீர்மான எண். 535<br>மன்றப்பொருள் அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| 31.05.2021 | <u>**பொருள் எண்.536**</u><br>இந்நகராட்சி பொதுசுகாதாப்பிரிவின் கீழ் கொரோனா வைரஸ் இரண்டாம் அலை தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளத் தேவையான கிருமிநாசினி, முகக்கவசம், கையுறை, PPE Kit, Engaging LCV's, Mobile Covid – 19 Testing, Providing Logistic support to Vaccination camps தொடர்பான அனைத்துப் பொருட்களையும் வாங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண்.9691//ஜே2/2021 நாள் 11.05.2021–ல் இந்நகராட்சிக்குப் மாநில பேரிடர் மேலாண்மை நிதியின் கீழ் (SDRF) ரூ.50,00,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><u>**அலுவலக குறிப்பு :–**</u><br>1) மன்றம் பதிவு செய்யலாம்.<br>2) அவசர அவசியம் கருதி கொரோனா வைரஸ் இரண்டாம் அலை தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள மேற்படி கடிதத்தில் "Tamilnadu Transparency in Tenders Act, 1998 மற்றும் "Tamilnadu Transparency in the Tender Rules 2000 Provisions of Section 9 & 10 of the said Act", அத்தியாவசியத் தேவைக்கு விலக்கு அளிக்கப்பட்டதன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும், செலவினம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி செலவினம் கொரோனா வைரஸ் தடுப்புப் பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண். 1203 /2020/எச்1)** | நகர்மன்றத் தீர்மான எண். 536<br>மன்றப்பொருள் அனுமதிக்கப்படுகின்றது |
| 31.05.2021 | <u>**பொருள் எண்.537**</u><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கொரோனா வைரஸ் இரண்டாம்அலை அதிவேகமாக பரவி வருவதால், பொதுசுகாதாரப்பிரிவின் மூலம் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளத் தேவையான PPE Kit - 100 எண்ணக்கை தெர்தல் ஸ்கேனர் – 40 எண்ணிக்கை ஆக்ஸிசன் அளவு பரிசோதனை கருவி – 25 எண்ணிக்கை ஆகியவற்றினை வாங்குவதற்காகும் தோராய செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><u>**அலுவலக குறிப்பு :–**</u><br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) அவசர அவசியம் கருதி பொதுசுகாதாரப்பணி பாதிக்காமல் இருக்க தனி அலுவலர் அவர்களின் அனுமதிபெற்று உள்ளூர் மற்றும் வெளியூர் முகவர்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்று மேற்படி பொருட்கள் வாங்கிக்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண். 1203 /2020/எச்1)** | நகர்மன்றத் தீர்மான எண். 537<br>மன்றப்பொருள் அனுமதிக்கப்படுகின்றது |
| 31.05.2021 | <u>**பொருள் எண்.538**</u><br>**இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி வைரஸ் தடுப்பு நடவடிக்கைக்கு தேவையான PPE Kit, Thermal Scanner மற்றும் Pulse Oximeter சப்ளை செய்யக் கோரி 07.05.2021 அன்று விலைப்புள்ளிக் கோரப்பட்டதில், கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள்** | நகர்மன்றத் தீர்மான |

<table>
<tr>
<td></td>
<td>
வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>PPE Kit</th><th>Thermal Scanner</th><th>Pulse Oximeter</th></tr>
<tr><td>1</td><td>Thimmaraya Enter Prises, No/8,3rd Avenue Ashok Nagar, Chennai-83</td><td>ரூ.390/-</td><td>ரூ.1950/-</td><td>ரூ.1500/-</td></tr>
<tr><td>2</td><td>Sudarsan Blochem, 2nd Floor, No.2, Suryakaner Apartment Gandhi Road, Tirupattur.</td><td>ரூ.400/-</td><td>ரூ.2100/-</td><td>ரூ.1550/-</td></tr>
<tr><td>3</td><td>Tirupattur Agro Engineering & Service Co-op Centre Asiriyar Nagar, Tirupattur</td><td>ரூ.273/-</td><td>ரூ.1800/-</td><td>ரூ.1500/-</td></tr>
</table>
<br>
மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசைஎண்.3-ல் உள்ள திருப்பத்தூர் அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ், திருப்பத்தூர் என்பவரின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால், அதனை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு :-</u><br>
1) திருப்பத்தூர் அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ், திருப்பத்தூர் என்பவரின் குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>
2) மேற்படி செலவினம் கொரோனா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து மேற்கொள்ளலாம்.
</td>
<td>எண். 538<br>மன்றப்பொருள் அனுமதிக்கப்படுகின்றது</td>
</tr>
<tr>
<td>31.05.2021</td>
<td>
<u>பொருள் எண்.539</u><br>
இந்நகராட்சி அலுவலகத்திற்கு தினசரி நாளிதழ்கள் தினத்தந்தி , தினமலர், தி இந்து நாளிதழ் உபயோகப்படுத்தப்படுகிறது. மேலும், கூடுதலாக தினகரன் நாளிதழ் கூடுதலாக பயன்படுத்தப்படுவதற்கு ஒரு வருடத்திற்கு சந்தா தொகை ரூ.1870/- ஆகும். சூமற்படி தொகையை செலுத்தி தினகரன் நாளிதழ் விநியோகம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u> :-<br>
1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2) மேற்படி செலவினத் தொகை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 539<br>மன்றப்பொருள்</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>(ந.க.எண்.001153/2021/பி2)</td>
<td>அனுமதிக்கப்படுகிறது</td>
</tr>
<tr>
<td>31.05.2021</td>
<td><u>பொருள் எண்.540</u><br>இந்நகராட்சிக்கு சொந்தமான TN23 S 1735 எண் கொண்ட குடிநீர் லாரியின் பேட்டரி (Double Battery System ) பழுதடைந்துள்ள காரணத்தினால் அவற்றை புதியதாக வாங்கி பொருத்தவும் அதற்காகும் தோராய செலவினம் தொகை ரூ.15000/– ற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலககுறிப்பு</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்கள் அனுமதிபெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரியதற்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதியளிக்கலாம்.<br>3. மேற்படி பணிக்கான செலவினம் ரூ. 15000/– இந்நகராட்சி குடிநீர்நிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். /2021/இ1)</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 540<br>மன்றப்பொருள் அனுமதிக்கப்படுகிறது</td>
</tr>
<tr>
<td>31.05.2021</td>
<td><u>பொருள் எண்.541</u><br>இந்நகராட்சிக்கு சொந்தமான TN23 S 1735 எண் கொண்ட குடிநீர் லாரியின் பேட்டரி பழுதடைந்துள்ள காரணத்தினால் அவற்றை புதியதாக (Double Battery System ) வாங்கி பொருத்தும் பணிக்கு இந்நகராட்சி தனி அலுவலர் அவர்கள் 05.05.2021–ஆம் தேதியில் முன்அனுமதி அளித்துள்ளதின் பேரில் உள்ளூர் விலைப்புள்ளி கோரியதற்கு 07.05.2021–ஆம் தேதியில் கீழ் காணும் பட்டியலில் கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள மூன்று உள்ளூர் விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர்</th><th>விலைப்புள்ளி விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>Ganesh Battery Centre & Auto Spares No.144,Krishnagiri Trunk Road, Near SBI, Ranipet</td><td>14750/–</td></tr>
<tr><td>2</td><td>Sri.Rajeswari Agencies,<br>MBT Road,<br>Ranipet</td><td>15000/–</td></tr>
<tr><td>3</td><td>Ganesh Battery House,<br>20/284C, Vellore MainRoad,<br>Arani, Thiruvannamalai</td><td>15250/–</td></tr>
</table></td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 541<br>மன்றப்பொருள் அனுமதிக்கப்படுகிறது</td>
</tr>
</table>

**<u>அலுவலககுறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று உளளூர் விலைப்புள்ளி கோரியதற்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்காணும் பட்டியலில் வரிசை எண் 1–ல் கண்டுள்ள கணேஷ் பேட்டரி சென்டர் & ஆட்டோ ஸ்பேர், இராணிப்பேட்டை என்பவர் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /2021/இ1)

---

31.05.2021

**<u>பொருள் எண்.542</u>**

இந்நகராட்சி வார்டு எண்.23 சந்தைமேடு பகுதியில் அமைந்துள்ள 14.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து மாந்தாஙகல் மோட்டுர் தண்ணீர் தொட்டிக்கு நீர்ஏற்றும் அறையில் அமைந்துள்ள மெயின் சுவிட்ச் மற்றும் மின்சார உதிரி பாகஙகள் பழுதடைந்துள்ள காரணத்தினால் அவற்றை புதியதாக வாஙகி பொருத்தும் பணிக்கு இந்நகராட்சி தனி அலுவலர் அவர்கள் 16.04.2021–ஆம் தேதியில் முன்அனுமதி அளித்துள்ளதின் பேரில் உள்ளுர் விலைப்புள்ளி கோரியதற்கு 19.04.2021–ஆம் தேதியில் கீழ் காணும் பட்டியலில் கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள மூன்று உள்ளுர் விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | கே.இராமமூர்த்தி<br>290/2, விநாயகர் கோயில் தெரு,<br>வள்ளலார் நகர்,<br>இராணிப்பேட்டை | 24460/– |
| 2 | கே.அசோக்,<br>143எ, முத்துமாரியம்மன் கோயில் தெரு, சாமி நகர்,<br>ஓடடேரி, வேலுார் –2. | 25575/– |
| 3 | டி.அருணகிரி<br>23/87 பஜார் தெரு,<br>இராணிப்பேட்டை | 26200/– |

நகர்மன்றத் தீர்மான எண். 542
மன்றப்பொருள் அனுமதிக்கப்படுகிறது

<table>
<tr><td></td><td><u>அலுவலககுறிப்பு</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று உளளுர் விலைப்புள்ளி கோாியதற்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்காணும் பட்டியலில் வரிசை எண் 1–ல் கண்டுள்ள திரு.கே,இராமமூர்த்தி என்பவர் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 797 /2021/இ1)</td><td></td></tr>
<tr><td>31.05.2021</td><td><u>பொருள் எண்.543</u><br>இந்நகராட்சி அனைத்து வரிவிதிப்பாளர்களுக்கும் கேட்பு அறிவிப்பு சார்வு செய்வதற்கு ஏதுவாக வருவாய் பிரிவில் உள்ள கணினிகளுக்கான புதிய பிரிண்டர் ஒன்று வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.20000/– க்கும் (ரூபாய் இருபதாயிரம் மட்டும் ) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2.மேற்படி பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3.மேற்படி பணிக்கான செலவினம் தொகை ரூ.20000/– இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>நகர்மன்றத் தீர்மான எண். 543 மன்றப்பொருள் அனுமதிக்கப்படுகிறது</td></tr>
<tr><td>31.05.2021</td><td><u>பொருள் எண்.544</u><br>இந்நகராட்சி வருவாய் பிரிவில் உள்ள கணிணிகளுக்கு பிண்டர் ஒன்று வாங்கி பொருத்தும் பணிக்கு இந்நகராட்சி தனி அலுவலர் அவர்கள் 05,05,2021– ஆம் தேதியில் முன் அனுமதி அளித்துள்ளதின் பேரில் உள்ளுர் விலைப்புள்ளி கோரியதற்கு 07,05,2021 ஆம் தேதியில் கீழ் காணும் பட்டியலில் கண்டுள்ளவாறு மூன்று உள்ளுர் விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><table><tr><th>வஎண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விலை விகிதம்</th></tr><tr><td>1</td><td>Good Luck Computer , Thirupathur</td><td>18500/–</td></tr><tr><td>2</td><td>Sakthi Soft Computers, Thirupathur</td><td>19750/–</td></tr><tr><td>3</td><td>Mukil Computers,</td><td></td></tr></table></td><td>நகர்மன்றத் தீர்மான எண். 544 மன்றப்பொருள் அனுமதிக்கப்படுகிறது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | Vaniyambadi | 21000/- |

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு தனி அலுவலர் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரியதற்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்காணும் பட்டியலில் வரிசை எண் 1 ல் கண்டுள்ள Good Luck Computer என்பவர் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /2021/இ1)

ஒம்./ ச. செல்வபாலாஜி,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
இராணிப்பேட்டை நகராட்சி.